**O.S.No. 194/2020**

**Date 11.06.2025**

**வா.சா.1 ஜோதி அய்யப்பன்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நானும் 1ம் வாதியும் ஒரே நபரிடம் இருந்து ஒரே நாளில் தான் கிரையம் பெற்றோம் என்றால் சரிதான். பவர் பத்திரம் மூலம் தாவா சொத்தை கிரையம் பெற்றோம் என்றால் சரிதான். நானும் வாதியும் ஒரே தெருவில் தான் குடியிருந்து வருகிறோம். எங்களுக்கு பவர் பத்திரம் மூலம் கிரையம் கொடுத்தவர் பெயர் கல்யாணசுந்தரம் ஆகும். மாரியம்மாள் குடும்பம் குறித்து எனக்கு தெரியும் மாரியம்மாளின் கணவர் பெயர் கல்யாண சுந்தரம் ஆகும். மாரியம்மாளின் தகப்பனார் பெயர் தெரியாது. தாவாசொத்தில் 1ம் வாதி சிறு குடியிருப்பு கட்டியுள்ளார் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதல்விசாரணையில் 1ம் வாதி கட்டியுள்ள வீட்டிற்கான பஞ்சாயத்து ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் வழக்கு சமயம் காலி மனையாக இருந்தது. தாவாசொத்தில் சமாதி இருப்பததையும், கிணறு இருப்பதற்கான ஆவணத்தை எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வீரசிகாமணி கிராமத்தில் எத்தனை குடும்பங்கள் குடியிருக்கிறது என்றால் பெரிய பஞ்சாயத்து ஆகும். மேற்படி கிராமத்தில் சுமார் 1லட்சம் நபர்கள் குடியிருப்பார்கள். தாவாசொத்து இன்றளவும் காலி மனையாக தான் உள்ளது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.